**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருநெல்வேலி.**

**வழக்கு எண் : MCOP.No.1787/2024**

**வழக்கு சாட்சி PW2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பசுபதி | மாவட்டம் | : | திருநெல்வேலி |
| தந்தை பெயர் | : | கடற்கரை | வயது | : | 53 |
| ஊர் | : | பாளையங்கோட்டை | | | |

சாட்சி அழைப்பாணையின் பேரில் ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**நாள் : 13.08.2026**

**முதல் விசாரணை**

நான் திருநெல்வேலி மாவட்டம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துவ பதிவேட்டு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த நீதிமன்றத்தின் அழைப்பாணையின் பேரில் திரு. ராதாகிருஷ்ணன், த/பெ.கருப்பசாமி என்பவர் எங்கள் மருத்துவமனையில் 21.04.2023 முதல் 11.05.2024 வரை சிகிச்சை பெற்றுள்ளார். அவருக்கான விபத்து பதிவேட்டு நகல், காயச்சான்று நகல், சிகிச்சை குறிப்பு நகல் ஆகிய ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேற்படி ஆவணங்கள் முறையே **Ex.X1 to X3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை மற்றும் சிசிச்சை விவரத்தை என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். அது சம்மந்தமாக மனுதாருக்கு சிசிக்சை அளித்த மருத்துவர் தான் சாட்சியம் அளிக்க முடியும் என்றால் சரிதான். எங்கள் மருத்துவமனையில் மனுதாரர் முழுமையாக சிசிச்சை பெற்று முழுமையாக தான் விடுவிக்கப்பட்டார் என்றால் சரிதான்.

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2026.08.13 17:40:13 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திருநெல்வேலி.